**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
நாகர்கோவில்.
2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாள் செவ்வாய் கிழமை

**இ.ம.எண். 9/2024**
**இன்**
**அ.வ.எண். 136/2020**

1. கமலம் (இறப்பு)
கூடுதல் 2. ஜெயா
கூடுதல் 3. சுரேந்திரன்
கூடுதல் 4. சித்ரா ... மனுதாரர்கள் / கருதப்படும் கூடுதல் 2 முதல் 4 வாதிகள்

/ எதிர் /

பாலகிருஷ்ணன் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது 24.02.2025ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. A. விமலன் மற்றும் திருமதி. C. கலைமதி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சகாயதாஸ் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்குக் கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

மனுதாரர்கள்/கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை III விதி 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் கூடுதல் 2 முதல் 4 வாதிகள் 10.11.2022 தேதியிட்டு வழங்கிய அதிகார

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.02.25 15:47:50 +0530

ஆவணத்தின் அடிப்படையில் அசல் வழக்கை தொடர்ந்து நடத்த அதிகார முகவருக்கு அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u> :

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் கருதப்படும் கூடுதல் 2 முதல் 4 வாதிகளின் அதிகாரம் பெற்ற முகவர் என்றும், வழக்கு பற்றிய விபரங்கள் மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி அசல் வழக்கினை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டி அசல் வழக்கின் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கின் வாதி மனுதாரரின் சித்தி என்றும், அவர் கடந்த 08.11.2022 அன்று வயோதிகம் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார் என்றும், கருதப்படும் கூடுதல் 2–வது வாதி அசல் வழக்கின் வாதியின் மகளும், கருதப்படும் 3 மற்றும் 4–வது வாதிகள் அசல் வழக்கின் வாதியின் இறந்து போன மகன் முருகேசனின் பிள்ளைகள் என்றும், மேற்படி அசல் வழக்கை நடத்துவதற்காக கருதப்படும் கூடுதல் 2 முதல் 4 வரை வாதிகள் மனுதாரருக்கு 10.11.2022 தேதியிட்ட அதிகார ஆவணம் மூலம் அதிகாரம் வழங்கியுள்ளனர் என்றும், அவ்வாவணத்துடன் நீதிமன்ற அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், கூடுதல் 2 முதல் 4 வாதிகள் மனுதாரருக்கு 10.11.2022 தேதியிட்டு வழங்கிய அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி அசல் வழக்கை தொடர்ந்து நடத்த நீதிமன்றம் அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் என்றும், இல்லாவிட்டால் மனுதாரர்கள்/கருதப்படும் கூடுதல் 2 முதல் 4 வாதிகளுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டமும் சொல்லொண்ணா துயரமும் ஏற்படும் என்றும், எனவே மனு அனுமதித்து கிடைக்க வேண்டுமென மனுதாரர்கள்/கருதப்படும் கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.02.25 15:47:58 +0530

3) **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், தபசில் சொத்தின் மீது மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்றும், மேலும் இறந்து போன வாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தொடர தேவையற்றவர்கள் என்றும், தபசில் சொத்தில் கூடுதல் 2 முதல் 4 வாதிகளுக்கு உரிமை இல்லையென்பதால் மனுதாருக்கு ஆதரவாக அவர்களால் செயல்படுத்தப்பட்டதாக கூறப்படும் அதிகாரப்பத்திரம் செல்லாது என்றும், எனவே இறந்து போன வாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் சார்பாக வழக்கை தொடர மனுதாரர் தகுதியான நபர் அல்ல என்றும், மனுதாரர் பூர்வீக இடத்திலிருந்து வெளியே தங்கியிருந்ததால் கூடுதல் 2 முதல் 4 வாதிகளை சரியான நேரத்தில் கட்சி சேர்க்க வலியுறுத்த முடியவில்லை என கூறுவது கால வரம்பு சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க மனுதாரரால் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், எனவே இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், உரிய நேரத்தில் இம்மனு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு அற்றுப்போய்விட்டது என்றும், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே மற்றும் விரும்பத்தகாதது என்றும், மேலும் தாமதத்திற்கு மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் தவறானது என்றும், மேலும் இம்மனுவை தாக்கல் செய்வதில் உள்ள ஒவ்வொரு தாமதம் குறித்தும் மனுதாரர்களால் சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படாது என்றும், இம்மனு மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் சுத்தமான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.02.25 15:48:04 +0530

4) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை**</u> :

இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்குக் கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) இம்மனுவானது, மனுதாரருக்கு கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரரை கூடுதல் 2 முதல் 4 வாதிகளின் அதிகார முகவராக நீதிமன்றத்தில் ஆஜராகவும், வழக்கை தொடர்ந்து நடத்தவும் மனுதாரரை அனுமதித்து உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்குக் கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வாதியான கமலம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணை தொடங்குவதற்காக நிலுவையில் உள்ள நிலையில். அசல் வாதி இறந்து போய் விட்டதால் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு அசல் வாதியின் வாரிசுகளான கூடுதல் 2 முதல் 4 வாதிகளின் அதிகார முகவராக மனுதாரரை அனுமதிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) இம்மனுவின் கூடுதல் 2 முதல் 4 வாதிகள் தரப்பில், அசல் வாதி 08.11.2022 அன்று இறந்து போய்விட்டதால் அவரது வாரிசுகளான கூடுதல் 2 முதல் 4 வாதிகள் அசல் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்காக மனுதாரருக்கு 10.11.2022 அன்று அதிகாரப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.02.25 15:48:10 +0530

9) மேலும், இம்மனுவுடன் 10.11.2022 அன்று கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொது அதிகார ஆவணத்தை பார்வையிட்டபோது, அசல் வாதியான கமலம் என்பவரின் வாரிசுகளான கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் C. செல்வராஜ் என்பவருக்கு அ.வ.எண்.136/2020 வழக்கில் கூடுதல் 2 முதல் 4 வாதிகளுக்காக வழக்கு நடத்த பொது அதிகார ஆவணம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

10) இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில், தபசில் சொத்தில் கூடுதல் 2 முதல் 5 வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்பதால் மனுதாருக்கு ஆதரவாக அவர்களால் செயல்படுத்தப்பட்டதாக கூறப்படும் அதிகாரப்பத்திரம் செல்லாது என்றும், எனவே இறந்து போன வாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் சார்பாக வழக்கை தொடர மனுதாரர் தகுதியான நபர் அல்ல என்றும், உரிய நேரத்தில் இம்மனு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு அற்றுப்போய்விட்டது என்றும், வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இம்மனுவிற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவை பரிசீலிக்கும்போது, மனுதாரருக்கு கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரரை கூடுதல் 2 முதல் 4 வாதிகளின் அதிகார முகவராக நீதிமன்றத்தில் ஆஜராகி அசல் வழக்கை தொடர்ந்து நடத்த மனுதாரரை அனுமதித்து உத்தரவிடக் கோரி மட்டுமே பரிகாரம் கேட்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. கூடுதல் 2 முதல் 4 வாதிகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க அனுமதி வழங்குமாறு மனுதாரரால் இம்மனுவில் எவ்வித பரிகாரங்களும் கேட்கப்படாத நிலையில், இறந்து போன அசல் வாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.02.25 15:48:17 +0530

சார்பாக வழக்கை தொடர்ந்து நடத்த மனுதாரர் தகுதியான நபர் அல்ல என்று எதிர்மனுதாரர் கூறுவது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

12) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, மனுதாரருக்கு கூடுதல் 2 முதல் 4 வாதிகளால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுதாரருக்கு கூடுதல் 2 முதல் 4 வாதிகளின் அதிகார முகவராக இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அசல் வழக்கை தொடர்ந்து நடத்த மட்டும் அனுமதி வழங்கி இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. ஆனால், இம்மனுவை உரிய நேரத்தில் தாக்கல் செய்யாமல் மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரயத்தை செலவு தொகை வழங்குவதன் பேரில் ஈடு செய்ய இயலும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

13) **<u>இறுதியாக,</u>**

இறுதியாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு ரூ.500/-ஐ வருகிற 05.03.2025-ற்குள் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தும்பட்சம் மனு அனுமதிக்கப்படும் என்றும், செலுத்த தவறும்பட்சம் மேற்படி மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 05.03.2025,

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.02.25 15:48:23 +0530

இரண்டாவது மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
நாகர்கோவில்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.02.25 15:48:30 +0530

இரண்டாவது மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
நாகர்கோவில்.

I.A. No.9 of 2024 in
O.S. No.136 of 2020
Fair Order
Date: 25.02.2025.
II ADM Court, Nagercoil.